**Crl.M.P.No. 1/2025 In**

**SC.No. 193/2023.**

நாள் :– 29.05.2025.

இருதரப்பும் கேட்கப்பட்டது. இந்த வழக்கை பொறுத்த வரையில் இந்த மனுவில் அசா. 3 சாட்சியை, அவர் முதல் விசாரணை சாட்சியம் கொடுத்தபோது, எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யவில்லை என்பதால், இயற்கை நீதியின் அடிப்படையில் அவரை குறுக்கு விசாரணை செய்வதற்காக இந்த மனு எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது. அரசு தரப்பை பொறுத்த வரை வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்பதற்காகவே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டு உள்ளது என்பதால், இந்த மனுவை தள்ளுபடி செய்ய கோரப்பட்டது. வழக்கு கோப்பை பரிசீலனை செய்ததில் அசா. 3 25.02.2025 தேதியில் முதல் விசாரணை செய்யப்பட்டு இருக்கிறார். ஆனால் குறுக்கு விசாரணை செய்யப்பட வில்லை. எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தள்ளி வைக்ககோரி அப்போது மனு எதுவும் தாக்கல் செய்யப் படவில்லை.

மேற்படி சாட்சி முதல் விசாரணை செய்யப்பட்டு சுமார் 3 மாதங்கள் கழித்து காலதாமதமாக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டு உள்ளது. விரைவான நீதி என்பது சாட்சிகளை விசாரணை செய்யும் போது உடனுக்குடன் அவர்களை குறுக்கு விசாரணை செய்தால் மட்டுமே அது சாத்தியம் ஆகும். இல்லை என்றால் வழக்கு விசாரணைகள் கால தாமதமாவது என்பது தவிற்க இயலாதது ஆகி விடுகிறது.

என்ற போதிலும், நீதியின் நலன் கருதியும், இயற்கை நீதி என்ற அடிப்படையிலும் இந்த மனுவை அனுமதிக்கலாம் என நீதிமற்னம் முடிவு செய்கிறது. இருந்த போதிலும், மேற்படி கால தாமதத்திற்கு எதிரி தரப்பு தான் காரணம் என்பதால் இந்த மனுவை செலவுத் தொகையுடன் அனுமதிக்க இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. அதன் அடிப்படையில் இந்த மனுவைப் பொறுத்து திண்டுக்கல், DLSA விற்கு ரூ. 1000/– த்தினை வருகின்ற 11.06.2025 தேதிக்குள் வழங்கும் நிலையில் மனு அனுமதிக்கப் படுகிறது. தவறினால் மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. மேலும், அசா. 3 நீதிமன்றத்திற்கு வரும்போது மேற்கண்ட சாட்சிக்கு படி செலவு தொகையாக தலா ரூ. 1000/– அவர் நீதிமன்றத்தில் முன்னிலையாகி சாட்சியம் அளித்த பிறகு வழங்க வேண்டும் என உத்தரவிடப் படுகிறது.

Adjourned to 11.06.2025.

R KANAGARAJ Digitally signed by R KANAGARAJ Date: 2025.05.29 17:25:16 +0530

CJM, DGL.